ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2090/16 - 2018 සැප්තැම්බර් මස 26 වැනි බදාදා - 2018.09.26

*2090/16 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி II - சட்ட சம்பந்தமானது

## உயர் நீதிமன்ற அறிவித்தல்கள்

### *உயர் நீதிமன்றத்தின் விதிகள் - 2018*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினுடைய அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின் கீழ் பிரதம நீதியரசராலும் அவ்வுறுப்புரையின் கீழ் அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் ஏனைய நீதியரசர்களினாலும் ஆக்கப்பட்ட விதிகள்.*

*(1) டபிள்யூ. பீ. ஜி. டெப், பிரதம நீதியரசர்*
*(2) எஸ். ஈ. வனசுந்தர, உயர் நீதிமன்ற நீதியரசர்*
*(3) பி. பீ. அலுவிஹாரே, உயர் நீதிமன்ற நீதியரசர்*
*(4) கே. எஸ். ஜே. த ஆப்ரூ, உயர் நீதிமன்ற நீதியரசர்*

*கொழும்பு,*
*2018, செத்தெம்பர் 26.*

*இவ்விதிகளானவை 2018 உயர் நீதிமன்ற விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம். இவ்விதிகள் மூலம் 1990 உயர் நீதிமன்ற விதிகளின் பாகம்* II *இன் 41 ஆம் விதிக்குப் பின்னர் 41(அ) மற்றும் 41(ஆ) ஆம் விதிகள் உள்ளடக்கப்பட்டு மற்றும் பாகம்* III *இற்குப் பின்னர்* III *(அ) எனும் பாகமொன்று உள்ளடக்கப்பட்டு திருத்தப்படுவதுடன், பிரதம நீதியரசரினால் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அறிவித்தலின் மூலம் விதிக்கப்படும் திகதியிலிருந்து வலுப்பெறும். இவ்விதியின் வெவ்வேறு பாகங்களுக்காக வெவ்வேறு திகதிகள் விதிக்கப்படலாம்.*

***1. 1990 உயர் நீதிமன்ற விதிகளின் பாகம் II இன் 41 ஆம் விதிக்குப் பின்னர் 41(அ) எனும் விதி உள்ளடக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் திருத்தம் :***

*"விண்ணப்பம் ஒன்றைச் செய்வதற்காக உயர் நீதிமன்றத்தில் கோப்பிடப்படும் யாதேனும் நகர்த்தல் பத்திரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மனுதாரர்கள் மற்றும் பிரதிவாதிகள் இருக்கும் சந்தர்ப்பத்தில் முதலாவது மனுதாரரின் மற்றும் பிரதிவாதியின் பெயர்கள் மாத்திரம் கொண்ட சுருக்கத் தலைப்பொன்று இருத்தல் போதுமானதாகும்."*

1A - G 28596 — 08 (2018/09)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***2. 1990 உயர் நீதிமன்ற விதிகளின் பாகம் II இன் 41 ஆம் விதிக்குப் பின்னர் 41(ஆ) எனும் விதி உள்ளடக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் திருத்தம் :***

*ஏற்புடைய வகையில் மனு மற்றும்/அல்லது விண்ணப்பம் ;*

*(அ) மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ள உறுதிக் கூற்றுக்கள் உண்மையானவை என உறுதியுரைக்கின்றேன் / சத்தியம் செய்கின்றேன். அல்லது மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ள உறுதிக் கூற்றுக்கள் உண்மையானவை என சத்தியம் செய்வதற்கு/ உறுதியுரைப்பதற்கு எனக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.*

*(ஆ) எனது அறிவின் அடிப்படையில் மற்றும் என்னிடமுள்ள ஆவணங்களைக் கவனமாகப் பரிசீலனை செய்ததன் பின்னர் மனுவில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் உண்மையானவை என சத்தியம் செய்கின்றேன்/உறுதியுரைக்கின்றேன்.*

*ஆகிய உறுதிக்கூற்றுக்களைக் கொண்டிருப்பின் அவை கீழ்வரும் விதிகளுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும் :*

(i) *1990 உயர் நீதிமன்ற விதிகள் பாகம் I (அ) மேன்முறையீடு செய்வதற்கான விசேட அனுமதி ;*
(ii) *1990 உயர் நீதிமன்ற விதிகள் பாகம் I (ஆ) மேன்முறையீடு செய்வதற்கான அனுமதி ;*
(iii) *1990 உயர் நீதிமன்ற விதிகள் பாகம் I (இ) வேறு மேன்முறையீடுகள் ;*
(iv) *1990 உயர் நீதிமன்ற விதிகள் பாகம் IV இன் 126 ஆம் உறுப்புரையின் கீழான விண்ணப்பங்கள்.*

***3. 1990 உயர் நீதிமன்ற விதிகள் பாகம் II இன் 41 ஆம் விதிக்குப் பின்னர் 41 (இ) எனும் விதி உள்ளடக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் திருத்தம் :***

*(1) அரசியலமைப்பின் 126 ஆம் உறுப்பிரையின் கீழ் யாதேனும் விண்ணப்பமொன்றை உள்ளடக்கிய விண்ணப்பம் மற்றும்/ அல்லது மேன்முறையீடொன்றை உயர் நீதிமன்றத்தில் கோப்பிடுகின்ற சகல மனுதாரர்களும் அவ்வாறான அனைத்து விண்ணப்பங்களுடனும், மனுதாரர் இறந்தால் அல்லது/மற்றும் மனுதாரரின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டால், அவ்வாறான இறப்பினால் அல்லது/மற்றும் மாற்றத்தின் பின்னரும் அவ்விண்ணப்பத்தை அல்லது மேன்முறையீட்டை முன்கொண்டு செல்வது மீதமாக இருப்பின், அவ்வனைத்து மனுதாரர்களினாலும் அவ்விண்ணப்பங்களை முன்கொண்டு செல்லும் காரணத்திற்காக தமது சட்டப்பிரதிநிதியாக செயற்படுவதற்கு முந்துரிமை ஒழுங்கு வரிசைப்படி ஆகக்குறைந்தது ஆள் ஒருவரை அல்லது மூன்று பேருக்கு மேற்படாத ஆட்களைப் பெயரிட்டு, இவ்விதிகளின் அட்டவணையில் உரிய வகையில் குறிப்பிட்டுள்ள மாதிரிக்கு அமைவான நிருபமொன்றைக் கோப்பிட வேண்டும்.*

*(2) சகல பிரதிவாதிகளும் தெரிபடுதலை அடையாளமிடும்போது இவ்விதிகளின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சட்டப்பிரதிநிதியாகச் செயற்படுவதற்கு முந்துரிமை ஒழுங்கு வரிசைப்படி குறைந்தபட்சம் ஆளொருவரை அல்லது மூன்று ஆட்களுக்கு மேற்படாதோரை பிரதிவாதியின் மரணம் மற்றும்/அல்லது நிலைப்பாட்டில் ஏற்படும் மாற்றத்தின்போது பிரதிவாதியின் விண்ணப்பத்தை முன்கொண்டு செல்வதற்கு பெயர் குறித்து நியமித்த நிருபமொன்றைக் கோப்பிடல் வேண்டும்.*

*(3) மேற்குறிப்பிட்டவாறான நிருபமொன்றை கோப்பிடாமல் மனுதாரர் ஒருவர் இறந்தால் அல்லது மனுதாரரின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டால் அது தொடர்பில் கவனத்திற் கொள்ளாமல் விண்ணப்பமானது நிராகரிக்கப்படும்.*

*(4) மேற்குறிப்பிட்டவாறான நிருபமொன்றைக் கோப்பிடாமல் பிரதிவாதி ஒருவர் இறந்தால் அல்லது பிரதிவாதியின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டால் அது தொடர்பில் கருத்திற்கொள்ளாது, நீதிமன்றத்தினால் பிரதிவாதிக்குப் பதிலாகச் சட்டப்பிரதிநிதி ஒருவரை நியமிக்காமல் குறித்த விண்ணப்பத்தினைக் கேட்டு விளங்கித் தீர்மானிக்க முடியும்.*

*(5) உயர் நீதிமன்றத்திடம் சகல மனுதாரர்களும் மற்றும்/அல்லது பிரதிவாதிகளும் ஏதேனும் விண்ணப்பம் மற்றும்/அல்லது மேன்முறையீட்டைக் கோப்பிட்டு 03 மாதங்களுக்குள் மனுதாரர் அல்லது பிரதிவாதியின் மரணம் அல்லது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டதன் அடிப்படையில் மனுதாரரின் அல்லது பிரதிவாதியின் சட்டரீதியான பிரதிநிதி என்ற வகையில் யாதேனும் ஆட்களைப் பெயர் குறித்து, அவர்களின் விருப்பம் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்ட ஆவணத்தைக் கோப்பிடல் வேண்டும்.*

*(6) அவ்வாறு செய்யாத அனைத்து மனுதாரர்கள் மற்றும்/அல்லது பிரதிவாதிகளுக்கு மேற்குறிப்பிட்ட விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படலாம்.*

(7) வழக்குத் தலைப்பினை மாற்றுவதற்கான தேவைப்பாடு எழுந்த தினத்திலிருந்து ஒரு மாதத்திற்குள் மனுதாரர்/ விண்ணப்பதாரியினால் அத்தலைப்பு திருத்தப்படல் வேண்டும்.

(8) மேற்குறிப்பிட்டவாறு செய்யத்தவறிய மனுதாரரின்/விண்ணப்பதாரரின் மனு அல்லது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.

(9) மனுதாரர் அரச உத்தியோகத்தராக அல்லது உத்தியோகபூர்வ தகைமையில் பிரதிவாதியாக ஆக்கப்பட்டிருந்தால் அச்சந்தர்ப்பத்தில் இவ்விதி பொருந்தாது.

**4. 1990 உயர் நீதிமன்ற விதிகளுக்கு III (அ) எனும் பாகம் உள்ளடக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் திருத்தம் :**

பாகம் - III (அ)

**பகிரங்க அலுவலர்கள் பிரதிவாதிகளாக இருக்கும் விண்ணப்பங்கள்**

(1) இவ்விதியானது பகிரங்க அலுவலர் ஒருவர் தமது உத்தியோகபூர்வ தகைமையில் பிரதிவாதியாக ஆக்கப்படுதலுடன் தொடர்புடையதாக உயர் நீதிமன்றத்தில் செய்யப்படுகின்ற சகல விண்ணப்பங்களின் போதும் ஏற்புடையதாய் இருக்கும். (அவ்வாறு ஆக்கப்பட்டது, அத்தகைய உத்தியோகபூர்வ தகைமையில் அவரினால் செய்யப்பட்ட செயலொன்றின் காரணமாகவோ அல்லது செயல் ஒன்று அவரினால் செய்யாமல் விடப்பட்டதன் காரணமாகவோ அல்லது வேறு வகையிலானதாக அமையும்.)

(2) பகிரங்க அலுவலர் ஒருவர், அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்தில் அவருடைய பதவிப்பெயர் குறித்து மட்டும் (பெயர் குறித்து அல்ல) பிரதிவாதியொருவராக ஆக்கப்படலாம். அத்துடன் தலைப்பில் அவரது பதவிப்பெயர் குறித்து அல்லது அவரினால் வகிக்கப்படும் பதவியைக் குறித்து அத்தகைய பகிரங்க அலுவலரை விவரிப்பது அதற்கேற்பப் போதுமானதாதல் வேண்டும். பிரதிவாதியொருவரை அவ்விதத்தில் போதுமான அளவில் இனங்கண்டுகொள்ள முடியாவிட்டால், அவரது பெயர் மனுவிலுள்ள உறுதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படுதல் போதுமானதாகக் கொள்ளப்படல் வேண்டும்.

(3) அத்தகைய விண்ணப்பம் எதுவும், அத்தகைய பிரதிவாதி போதுமான அளவு இனங்காணப்பட்டு விவரிக்கப்பட்டிருக்கின்றார், அத்துடன் அத்தகைய விட்டுவிடுகையினால், குறைபாட்டினால் அல்லது ஒழுங்கீனத்தினால் தவறாக இட்டுச்செல்லப்படவில்லை அல்லது பங்கப்படுத்தப்படவில்லை என நீதிமன்றம் திருப்திப்பட்டால், அத்தகைய பிரதிவாதியின் பெயர், பதவிப்பெயர், அவரைப் பற்றிய விவரிப்பு அல்லது அவரின் முகவரி தொடர்பிலான ஏதேனும் விட்டுவிடுகை, குறைபாடு அல்லது ஒழுங்கீனம் காரணமாக, தள்ளுபடி செய்யப்படுதல் ஆகாது. நீதிமன்றமானது அத்தகைய ஏதேனும் விட்டுவிடுகை, குறைபாடு அல்லது ஒழுங்கீனம் தொடர்பில், வழக்குரைத்தல்களில் திருத்தம் செய்வதற்கு, புதிதான அல்லது மேலும் அறிவித்தல் கொடுப்பதற்கு, செலவுத் தொகைகளுக்கு அல்லது வேறு வகையாக நீதி நலனுக்குத் தகுந்ததென அது கருதுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(4) (அ) தமது பதவியை அதன் பின்னர் வகிக்காதொழிந்துள்ள பகிரங்க அலுவலரொருவரினால் உத்தியோகபூர்வ தகைமையில் செய்யப்பட்ட ஒரு செயல் அல்லது விட்டுவிடுகை தொடர்பில் அத்தகைய பதவியில் அப்போதைக்கு இருக்கின்ற அவரை அடுத்துறுபவருக்கு எதராக, (2) ஆம் உப விதியின் நியதிகளின்படி அவரது பதவிப்பெயரை மட்டும் குறிப்பிட்டு அத்தகைய அடுத்துறுபவரைப் பிரதிவாதியொருவராக ஆக்கி அப்போதைக்கு விண்ணப்பமானது செய்யப்பட்டு தொடரப்படலாம்.

(ஆ) பகிரங்க அலுவலர் ஒருவரினால், தமது உத்தியோகபூர்வ தகைமையில் செய்யப்பட்ட செயல் அல்லது செய்யாது விடப்பட்டது தொடர்பில், அவரது பதவிப்பெயரைக் குறிப்பிட்டு (அவரது பெயரினால் அல்ல) பிரதிவாதியொருவராக ஆக்கப்பட்டிருக்கின்ற அவருக்கெதிராக அத்தகைய விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டு, அத்துடன் அத்தகைய பகிரங்க அலுவலர், அத்தகைய விண்ணப்பமானது முடிவுறாதிருக்கும் போது அத்தகைய பதவியை வகிக்காதொழிந்தால், நீதிநலனுக்காக அத்தகைய சேர்த்தல், பதிலீடு, பதிலிப்பத்திரம் அல்லது அறிவித்தல் அவசியமானதென நீதிமன்றம் கருதினாலொழிய, பிரதிவாதிகள் எவரினதும் சேர்த்தல் அல்லது பதிலீடு, புதிதான பதிலாள் பத்திரமொன்று அல்லது ஏதேனும் அறிவித்தல் வழங்குதல் எதுவும் இல்லாமல், அத்தகைய பதவியில் அப்போதைக்கு இருக்கின்ற அவரை அடுத்துறுபவருக்கெதிராக அத்தகைய விண்ணப்பமானது தொடரப்படலாம். அத்தகைய அடுத்துறுபவரானவர், தமது உத்தியோகபூர்வ தகைமையில், அத்தகைய மூலப்பிரதிவாதிக்கெதிராக அல்லது அவர் தொடர்பில் நீதிமன்றத்தினால் ஆக்கப்படும் கட்டளை எதற்கும், அல்லது விடுக்கப்படும் பணிப்பு எதற்கும் கட்டுப்பட்டவராவார்.

(இ) (பெயரில் அல்லாது) தமது பதவிப் பெயர் குறிப்பிடப்பட்டு பிரதிவாதியொருவராக ஆக்கப்பட்டிருக்கின்ற பகிரங்க அலுவலர் ஒருவருக்கெதிராக அத்தகைய விண்ணப்பமொன்று செய்யப்பட்டு, அத்துடன் அத்தகைய விண்ணப்பத்தின் இறுதித் தீர்மானத்தின் பின்னர், ஆனால் அதில் ஆக்கப்பட்டுள்ள கட்டளையுடன் அல்லது கொடுக்கப்பட்டுள்ள பணிப்புடன் இசைந்தொழுகுவதற்கு முன்னர் அத்தகைய பகிரங்க அலுவலர் பதவி வகிக்காதொழியுமிடத்து, அத்தகைய பதவியில் அப்போதைக்கு இருக்கின்ற அவரை அடுத்துறுபவர், அத்தகைய கட்டளைக்கு அல்லது பணிப்புக்குக் கட்டுப்பட்டவராவார் என்பதுடன் அவர் அத்தகைய கட்டளையுடன் அல்லது பணிப்புடன் இசைந்தொழுகுதலும் வேண்டும்.

(5) தமது உத்தியோகபூர்வ தகைமையிலான செயலொன்று அல்லது விட்டுவிடுகை ஒன்று தொடர்பில் பகிரங்க அலுவலர் ஒருவருக்கெதிராக உயர் நீதிமன்றத்தின் முன் கோப்பிடப்பட்ட சகல விண்ணப்பங்களின் போதும் பிரதம நீதியரசரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதிக்கு முன்னர், தலைப்பில் அத்தகைய பகிரங்க அலுவலரின் பெயர் மற்றும் அவரது பதவிப்பெயர் ஆகிய இரண்டினாலும் விவரிக்கப்பட்டிருந்தாலும்கூட 4 (ஆ) மற்றும் 4 (இ) என்னும் உப விதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) இவ்விதியிலுள்ள எதுவும், முன்னர் பதவியிலிருந்த எவரினதும் செயல் அல்லது விட்டுவிடுகை தொடர்பில் பகிரங்க அலுவலர் ஒருவர் மீது ஏதேனும் சொந்தப் பொறுப்பைச் சுமத்துவதாகக் கருதப்படலாகாது.

(7) இவ்விதியில், "பதவி வகிக்காதொழிதல்" என்பது, "இறத்தல் அல்லது பதவியிலிருந்து ஓய்வுபெறுகிறார் அல்லது விலகுகின்றார் அல்லது வேறு ஏதேனும் விதத்தில் பதவி வகிக்காதொழிதல் எனப் பொருள்படும்.

(8) இவ்விதிகளின் பணிகளுக்காக "பகிரங்க அலுவலர்" எனப்படுவது, நீதிமன்ற அதிகாரி நீங்கலாக குடியரசின் கீழ் சம்பளம் பெறும் யாதேனும் பதவி ஒன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஆவதுடன் கீழ்க்குறிப்பிடப்படும் வகுதியினரும் அதனுள் உள்ளடக்கப்படுவார்கள் :

(i) அரச கூட்டுத்தாபனமொன்றில் யாதேனும் பதவியை வகிக்கும் நபர் ஒருவர் ;

(ii) அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் அல்லது யாதேனும் மாகாண சபை ஒன்றின் அமைச்சர் ஒருவர் ;

(iii) அரசியலமைப்பின் 41 (ஆ) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழு ஒன்றின் அங்கத்தவர் ஒருவர் ;

(iv) விசாரணை ஆணைக்குழுச் சட்டம் மற்றும் அதன் திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அங்கத்தவர் ஒருவர் ;

(v) 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க விசாரணை செய்வதற்கான விசேட சனாதிபதி ஆணைக்குழுச் சட்டம் மற்றும் அதன் திருத்தத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின் அங்கத்தவர் ஒருவர் மற்றும்/ அல்லது விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் திருத்தத்திற்கு அமைவாக அன்றி வேறு ஏதேனும் சட்டத்தினால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின் அங்கத்தவர் ஒருவர் :

டபிள்யு. பீ. ஜி. டெப்,
பிரதம நீதியரசர்.

எஸ். ஈ. வனசுந்தர,
உயர் நீதிமன்ற நீதியரசர்.

பி. பீ. அலுவிஹாரே,
உயர் நீதிமன்ற நீதியரசர்.

கே. எஸ். ஜே. த ஆப்ரூ,
உயர் நீதிமன்ற நீதியரசர்.

நிருபம்

**சட்டப் பிரதிநிதியைப் பெயர் குறித்து நியமிக்கின்ற நிருபத்தின் படிவம்**

உயர் நீதிமன்ற மனுவின்/விண்ணப்பத்தின் இலக்கம் -------------

இவ்வழக்கு இறுதியாகத் தீர்மானிக்கப்படுவதற்கு முன்னர் நான் இறக்கும் பட்சத்தில் வழக்கின் நோக்கத்திற்காக இவ்வழக்கின் (மனுதாரர்/விண்ணப்பதாரி/பிரதிவாதி/சேர்க்கப்படுவதற்கு/பதிலீடு செய்யப்படுவதற்கு நாடுகின்ற திறத்தவர்) ஆகிய நான் --------------------- ----------------------- இவ்வழக்கின் சட்டப் பிரதிநிதியாகக் கீழ்க்குறிப்பிடப்படும் ஆட்களை இத்தாற் பெயர் குறித்து நியமிக்கின்றேன்.

முந்துரிமை இல. 01 ------------------------------------------------------- என்னும் இடத்தைச் சேர்ந்த (முகவரி) ---------------- ----------------------------------------------- (பெயர்)

02. -------------------------------------- (பெயர்) ----------------------------------------- (முகவரி)

03. -------------------------------------- (பெயர்) ----------------------------------------- (முகவரி)

மேற்கூறப்பட்டவாறாக எனது இறப்பு ஏற்படும் பட்சத்தில் வழக்கின் நோக்கங்களுக்காக எனது சட்டப்பிரதிநிதியாக மேலே தரப்பட்டுள்ள முந்துரிமை ஒழுங்குவரிசைப்படி அவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றும் இத்தால் மேலும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

01. ------------------------------------ என்னுமிடத்தைச் சேர்ந்த ------------------------------------ ஆகிய நான், மேற்படி நியமனத்துக்குச் சம்மதமளிக்கின்றேன்.

----------,
கையொப்பம்.

ஒரு சட்டத்தரணியாக/சமாதான நீதவானாக/சத்தியப்பிரமாண ஆணையாளராகவுள்ள ------------------------------- என்னுமிடத்தைச் சேர்ந்த --------------------------------------------- ஆகிய நான், இந்நிருபத்தின் உள்ளீடுகளை வாசித்து விளங்கிக்கொண்ட/இந்நிருபத்தின் உள்ளீடுகள் என்னால் வாசித்துக் காட்டப்பட்டு விளங்கப்பட்ட மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆள், 20 ----- ஆம் ஆண்டு ----- மாதம் ----- ஆம் நாளாகிய இன்று ------ இல் தனது கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டாரெனச் சான்றுப்படுத்துகின்றேன்.

--------,
கையொப்பம்.

சட்டத்தரணி/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்

02. ------------------------------------------ என்னுமிடத்தைச் சேர்ந்த ---------------------------------------- ஆகிய நான், மேற்படி நியமனத்துக்குச் சம்மதமளிக்கின்றேன்.

----------,
கையொப்பம்.

ஒரு சட்டத்தரணியாக/சமாதான நீதவானாக/சத்தியப்பிரமாண ஆணையாளராகவுள்ள ------------------------------- என்னுமிடத்தைச் சேர்ந்த ---------------------------------------------- ஆகிய நான், இந்நிருபத்தின் உள்ளீடுகளை வாசித்து விளங்கிக்கொண்ட/இந்நிருபத்தின் உள்ளீடுகள் என்னால் வாசித்துக் காட்டப்பட்டு விளங்கப்பட்ட மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆள், 20 ----- ஆம் ஆண்டு ----- மாதம் ----- ஆம் நாளாகிய இன்று ------ இல் தனது கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டாரெனச் சான்றுப்படுத்துகின்றேன்.

--------,
கையொப்பம்.

*சட்டத்தரணி/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்*

*03. -------------------------------------------- என்னுமிடத்தைச் சேர்ந்த ---------------------------------------- ஆகிய நான், மேற்படி நியமனத்துக்குச் சம்மதமளிக்கின்றேன்.*

----------,
கையொப்பம்.

*ஒரு சட்டத்தரணியாக/சமாதான நீதவானாக/சத்தியப்பிரமாண ஆணையாளராகவுள்ள ------------------------------ என்னுமிடத்தைச் சேர்ந்த --------------------------------------------- ஆகிய நான், இந்நிருபத்தின் உள்ளீடுகளை வாசித்து விளங்கிக்கொண்ட/ இந்நிருபத்தின் உள்ளீடுகள் என்னால் வாசித்துக் காட்டப்பட்டு விளங்கப்பட்ட மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆள், 20 ----- ஆம் ஆண்டு ----- மாதம் ----- ஆம் நாளாகிய இன்று ------ இல் தனது கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டாரெனச் சான்றுப்படுத்துகின்றேன்.*

--------,
கையொப்பம்.

*சட்டத்தரணி/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்*

*10-318*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*